

உ

ஸ்ரீ ஆதிதுர்க்கை அம்பாள் துணை





அளவையூர் - பெருமாக்கடவை

அருள் மிகு அஷ்டபுய

ஸ்ரீ ஆதிதுர்க்கா அம்பாள்

# கும்பாபிஷேக சிறப்பிதழ்

கர வருடம் வைகாசித் திங்கள்

22ம் நாள்

**5.6.2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ரமணன் வீடியோ சென்ரர்



- Video Editing
- Fax
- Browsing
- Phone repairing

*School of Information technology*

**கணனி கல்வியகம்**



பிரதான வீதி,
அளவெட்டி.

அளவெட்டி

# காண்டிபன் போட்டோ & வீடியோ



தரமான ஒளிப்பதிவுகளுக்கும்,
புகைப்படப்பிடிப்புக்களுக்கும்



கும்பிழாவளையடி,
அளவெட்டி வடக்கு.

அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ ஆதிதுர்க்கை அம்பாள் துணை

# அளவையூர் பெருமாக்கடவை அருள்மிகு அஷ்டபுய ஸ்ரீ ஆதி துர்க்கை அம்பாள்



2011

# கும்பாபிஷேக சிறப்பிதழ்

## திருப்பொன்னூஞ்சல்
## அம்பிகை தோத்திரம்



இயற்றியர்

அளவையூர் அருட்கவி சீ.விநாசித்தம்பி புலவர்


மண்டலாபிஷேக பூர்த்தி வெளியீடு

இந்நூல் விற்பனையாகி வரும் பணம் ஆலய திருப்பணிக்குரியது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ ஆதிதுர்க்கை அம்பாள் துணை

# அளவெட்டி பெருமாக்கடவை
# ஸ்ரீ ஆதிதுர்க்கை அம்பாள்
# கும்பாபிஷேக சிறப்பிதழ்

பிரார்த்தனை

1. வளமிகு செல்வ மெல்லாம் வழங்கிடும் கருணைத்தாயே
உளமிசை வீற்றிருக்கும் ஓங்கார சோதித்தாயே
தளர்விலா தெம்மைக்காக்கும் சராசர முதல்வித்தாயே
அளவையூர் ஆதி துர்க்கை அம்மையே போற்றி போற்றி.

2. திண்டிறற் சிங்கமேறித் தீயராம் அசுரன் மாளக்
கொண்டிடு மெண்கரத்தால் கொடும்சமர் புரிந்தாயம்மா
தொண்டரின் துயரம் நீக்கித் துணைநின்று காப்பாயம்மா
அண்டர்சூழ் ஆதி துர்க்கை அம்மையே போற்றி போற்றி.

3. பொன்பொலி முகத்தினாளே பூரண மதியினுள்ளே
இன்பநர்த் தனங்களாடும் இறைவியே யாங்களுற்ற
துன்பங்க ளனைத்தும் தீர்த்துத் துணைபுரிந்தருள்வாயம்மா
அன்புயர் ஆதி துர்க்கை அம்மையே போற்றி போர்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி பெருமாக்கடவை
# ஸ்ரீ ஆதிதுர்க்காதேவி
# திருப்பொன்னூஞ்சல்

*காப்பு*

திருவளரும் பிரணவனே விக்னராஜா
தேடிவந்து புரவிமுகத் தரசி வேண்ட
மருவழகு முகமாக்கி அளவையூரில்
வாய்ந்தபெரு மாக்கடவை என்றுபோற்றும்
தருமமிகு பதியமர்ந்த உமைகுமாரா
தங்குதிரு முறைகாட்டும் பிரானே எட்டுக்
கரமுடையாள் ஆதிதுர்க்கை யூஞ்சல் பாடக்
கணபதியே நின்பாதம் காப்பதாமே.

நூல்

1. பொன்பெருகு மதிமுகமும் பவளவாயும்
புரிசடையும் மணிமுடியும் தரளத்தோடும்
மின்பிரபைக் கைவளையும் கயலின் கண்ணும்
மிளிர்மூக்கும் மங்கலமும் வண்ணக்கச்சும்
மென்பசுமை துகிலுமிசைச் சிலம்பும் காட்டி
விண்ணவர்சூழ் கோயிலில்வீற் றிருக்க வந்தாய்
அன்படியார் பணிபெருமாக் கடவைமேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்.

2. முன்னொருகால் திருத்தலாயாத் திரைமேற் கொண்ட
மூதறிஞ னாம்சிற்றம் பலப்பே ராளன்
மன்னுகன விற்புகன்ற வாக்கின் வண்ணம்
மதுரையிலே வாங்கிவந்த சிலையை வைத்துத்
தொன்னெறியில் பொங்கலிட்டுப் பூசை யாற்றித்
துலங்குசிறு கோயிலமைத் தாத ரித்த
அன்னையே அருட்பெருமாக் கடவை மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஈரிரண்டு வேதங்கள் எழிற்றூணாக்
இருபத்தெட் டாகமங்கள் இணை நாணாக
ஏரணிஎண் ணெண்கலைகள் விதானமாக
இதிகாச புராணங்கள் விட்டமாக
பேரதிக திருமுறைகள் மாடமாக
பிரணவமா தத்துவங்கள் பீடமாக
ஆர முதம் மொழிபெருமாக் கடவைமேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்.

4. அம்புலியும் ஆதவனும் கவிகைதாங்க
அரம்பையர்கள் ஜயைவிஜயை கவரிஓங்க
உம்பரரும் முனிவர்களும் விருதுகாவ
ஓதுமய னுடன்வாணி மலர்கள் தூவ
நம்பனுடன் நாரணனார் இருபால் மேவ
நளினமலர்ச் செல்வியலங் காரம் பூண
அம்புயவா விப்பெருமாக் கடவை மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்

5. இருளோங்கு புவனங்கள் துயரம் நீங்க
இருநாழி நெல்கொண்டு படியளந்தாய்
மருளோங்கு மகிஷனது தலையைக் கொய்து
மன்னுயிர்க்கு வாழ்வளித்தாய் மதுரை வந்து
பொருளோங்கு மரசாட்சி புரிந்தாய் நாங்கள்
புலம்பியழும் துயரத்தைத் தீர்க் கொணாதோ
அருளோங்கு தவப்பெருமாக் கடவை மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்

6. சீலமிகு பாலூட்டி ஓலை நீட்டி
சிவபோத நூல்காட்டிச் சூலைகூட்டி
கோலதிரு முறைபாடு வித்தான் பங்கில்
கோகிலமாய் யமர்ந்துகுறை தீர்க்கும் தாயே
நீலவண்ணன் சோதரியே சும்பன் சண்டன்
நிசும்பனெனும் அசுரகுலம் அழித்தாய் புட்கள்
ஆலுமலர்ப் பொழிற்பெருமாக் கடவை மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. வானமதி காட்டுதற்குத் தோடெறிந்தாய்
மகாயாகம் செறுகாளி யாக வந்தாய்
ஞானவடி வேலவனை வந்தணைத்தாய்
நவகோளர் பணிபுரிய வரங்கொடுத்தாய்
ஈனமிகு பவப்பிணியைத் தீர்ப்பாயென்றுன்
இணைமலர்த்தாள் வேண்டிநின்றோம் கண்பாரம்மா
ஆனைமுக னொடுபெருமாக் கடவை மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்

8. நீறுதிகழ் நுதற்றிலக மாடப் பின்னல்
நெறியசடை ஆட மணிச் சுட்டி யாட
ஏறுமிசைச் செவியாட அருள்வாயாட
இருதனமேல் மங்கலப்பூ ணணிக னாட
பேறருளென் கரங்களுமா யுதமு மாட
பிறங்குமிரத் தினவுடையும் கழலுமாட
ஆறுமுக னுடன் பெருமாக் கடவை மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்

9. பரமசிவ னாடஐங் கரத்தனாட
பாலவடி வேலழகன் ஆடவீர
வரதநர சிங்கமா மாயனாட
மலர்மகளும் கலைமகளு மயனுமாட
பரவிடுமெண் டிசையாட அண்டமாட
பரமானந் தத்தடியார் பாடி யாட
அருணலங்கள் மிகு பெருமாக் கடவைமேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்

10. மூவிலைச்சூ லக்கரத்தாய் ஆடீரூஞ்சல்
மொட்டலர் மாதுளைநிறத்தாய் ஆடீரூஞ்சல்
சீவகல சம்பிடித்தாய் ஆடீரூஞ்சல்
தில்லைவனத் தேநடித்தாய் ஆடீரூஞ்சல்
தாவுசிங்க வரகனியே ஆடீரூஞ்சல்
தாமரைப்பூ வாசனியே ஆடீரூஞ்சல்
ஆவினம்பால் பொழிபெருமாக் கடவை மேவும்
ஆதிதுர்க்கை யம்பிகையே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

வளமுதவு மழைவாழி பசுக்கள் வாழி
மறைவாழி ஆகமங்கள் வாழி, அன்பின்
உளமலரும் தவதானம் ஓங்கி வாழி
உணர்வுறுமந் தணர் வாழி தமிழ்த்தாய் வாழி
தெளிவுதரு திருமுறைகள் வாழி சைவச்
சீரடியார் கூட்டமெல்லாம் செழித்து வாழி
அளவைபெரு மாக்கடவைக் கணேசன் வாழி
அவரன்னை துர்க்கைபதம் வாழி வாழி

## மங்களம்

கற்பகக் கணேசனுக்கு மங்களம் மங்களம்
கண்ணனுக்கும் கந்தனுக்கும் பரமனுக்கும் மங்களம்
சிற்பரையாம் ஆதிதுர்க்கை அம்பிகைக்கு மங்களம்
தீரவீர பத்திரர்க்கும் ஐயனார்க்கும் மங்களம்
பொற்பிரம்புக் கரகமுத்து மாரித்தாய்க்கு மங்களம்
பொங்குசடைச் சூலநாதன் வைரவர்க்கு மங்களம்
நற்புகழ்கள் பாடுமடி யார்களுக்கு மங்களம்
நயந்தபணித் தொண்டருக்கு மங்களம் மங்களம்

சுபம்

ஆக்கியோன்
அருட்கவி சீ.விநாசித்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஸ்ரீ ஆதி துர்க்கை அம்பாள் துணை

## பெருமாக்கடவை ஸ்ரீ ஆதி துர்க்கை அம்பிகை தோத்திரம்

ஆதி பராபர அன்னையே போற்றி
சோதியாய் மலரும் சுடரே போற்றி
நாத விந்துகலை நலமே போற்றி
வேத ஆகம விளக்கே போற்றி
ஈனம் தவிர்க்கும் இறைவியே போற்றி
ஞான மாம்பழ ரசமே போற்றி
வானவர்க் கரிதாம் மணியே போற்றி
மோனங் கடந்த முதலே போற்றி
சிகரம் விளக்கும் வகரமே போற்றி
நிகரில்லாத நிலவே போற்றி
ஒன்றெனப் பலவென நின்றனை போற்றி
மன்றினில் ஆடும் மாதா போற்றி
ஐந்தெழுத் தாகிய ஆத்தாள் போற்றி
சிந்தனை மேடைக் கூத்தாள் போற்றி
பந்தனை அறுக்கும் பரையே போற்றி
மந்திர வடிவச் சிலையே போற்றி
பருவகத் துதித்த பார்வதி போற்றி
கருவினை அறுக்கும் கபாலியே போற்றி
காதணி வீசிய கன்னியே போற்றி
போதனை தந்த உமையே போற்றி
கரகத் தமர்ந்த மாரியே போற்றி
திரிபுர நர்த்தன சுந்தரி போற்றி
தனம் சுகம் கல்வி தருவாய் போற்றி
மனம்குளிர் இனத்தை வழங்குவாய் போற்றி
அடியவர்க் கெளிய அருளே போற்றி
கொடியவர்க் கெட்ட இருளே போற்றி
நவகோள் துதிக்கும் நாயகி போற்றி
தவ வழி யுணர்த்தும் சங்கரி போற்றி
துட்டரை அழிக்கும் துர்க்கையே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்சித் தருளும் இலட்சுமி போற்றி
கல்விப் பொருள் தரும் வாணியே போற்றி
நல்வரம் கொடுக்கும் நந்தினி போற்றி
மனத்தினில் நினைத்த மனோன்மணி போற்றி
நினைத்த வடிவுடைத் தயாபரி போற்றி
காயத் திரிசிவ கௌரி போற்றி
சாவித் திரிசுப சாந்தினி போற்றி
சித்த ரஞ்சனி சியாமளி போற்றி
தத்துவ சாம்பவி சங்கரி போற்றி
சிம்ம வாகினி சங்கரி போற்றி
அம்பிகை அர்த்த நாரியே போற்றி
சம்பூ ரணிமகா காளியே போற்றி
செம்பவளச் சடைப் பகவதி போற்றி
வாக்கு மனத்தைக் கடந்தாய் போற்றி
போக்கும் வரவும் இல்லாய் போற்றி
பிரணவ மந்திரப் பெரியவள் போற்றி
தருண மழையாய் வருபவள் போற்றி
எம்மை இயக்கும தாயே போற்றி
செம்மை வாழ்வருள் செல்வமே போற்றி
பேரார் அளவைப் பெருமாக் கடவையில்
தாரார் கணபதித் தலைமக னுடனே
அம்பு வில் கேடயம் அங்குசம் பாசம்
செம்பொறிச் சூலம் திகிரி சங்கம்
என்னு மாயுதங்கள் ஏந்திய எட்டு
மன்னுகரத் தொடு வயச்சிங் கத்தில்
பொற் கோவில் கொண்ட பூரணியாகி
அற்புதம் புரிந்திடும் ஆதி துர்க்கையே
பிழை எல்லாம் பொறுப்பாய் அம்மா போற்றி
கழலினை தந்தெம்மைக் காப்பாய் போற்றி
சரணம் சரணம் ஓம் சக்தி சரணம்
சரணம் சரணம் பராசக்தி சரணம்
அருணப் பிரகாச நிரஞ்சினி சரணம்
அடைக்கல அம்மா சரணம் சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி பெருமாக்கடவை
# ஸ்ரீ ஆதி துர்க்கை

திருவருள் பர்ணமிக்கும் இடந்தோறும் ஆலயங்கள் தோன்று கின்றன. அநாதியாக அமைந்த கணேசப் பெருமானின் ஸ்தலத்தை அடைந்த போது மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகத்தின் வெளித் தோற்றமும் மனத் தோற்றமும் முற்றாக நீக்கியமையால் இத்தலம் பெருமாக்கடவை எனப் பெயர் பெற்றது.

சுமார் 200 வருடங்களுக்கு முன்னே பெருமாக்கடவைப் பக்தனாகிய சிற்றம்பலம் என்பவர் இந்தியத்திருத்தலயாத்திரை செய்தார். அப்போது மதுரை மீனாட்சி ஆலயத்துக்கும் சென்றார். அங்கே நித்திரை செய்தார். கனவிலே ஒரு பெண் தோன்றினாள். "உன்னுடைய கணபதியுடன் என்னையும் வைத்து ஆதரிப்பாயாக" என்று கூறி மறைந்தாள். அதிகாலை திருவுருவங்கள் விற்பனையாகும் ஒரு இடத்திற்கு வந்தார். அங்கே எட்டுக் கரத்துடன் அமைந்த சிலையைத் தூக்கினார். அது மனத்தை ஈர்த்தது. பணம் கொடுத்து வாங்கினார். இது துர்க்கையின் சிலை என்றான் விற்பனையாளன். அப்படியே "அம்மா துர்க்கை" என்று கூறி ஆனந்தத்துடன் இத்தலத்திற்கு கொண்டு வந்து வைத்து வழிபாடு செய்தார்.

இந்த அம்பிகைக்கு இன்றைய தினம் மகாகும்பாபிஷேகம் செய்த அவளடியார்கள் கருணை வெள்ளத்தில் நீந்துகிறார்கள். 05-05-95 வெள்ளிக்கிழமை நிகழ்ந்த கும்பாபிஷேக மலராக இந்நூல் மலருகிறது. அன்னை துர்க்கையின் திருப்பொன்னூஞ்சலும் தோத்திரமும் இந்நூலில் இடம்பெறு கின்றன. எம்பெருமாட்டியின் திருப்பணித் தொண்டர்கள் விருப்பத்தின் பிரகாரம் வெளிவரும் இந்நூலைப் பக்தியடியார்கள் படித்து துர்க்கைத் தாயின் திருவருள் பெறுவீர்களாக எனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்திக்கின்றேன்.

மேற்படி ஆலயத்திருப்பணி நிறைவேறுவதற்குப் பெரும்பாடுபட்ட திருத்தொண்டர்களாகிய, திருவாளர்கள் - வைத்தியகலாநிதி சி. தங்கவேல் அவர்கள், க. கந்தையா அவர்கள், க. கதிர்காமநாதன் அவர்கள், ப. இராஜகோபாலன் அவர்கள், த. கணேசநாதன் அவர்கள், நிரந்தர அர்ச்சகர் ஸ்ரீநவநீதசர்மா அவர்கள், திருமதி தா. நிர்மலா அவர்கள், போஷகர். திருமதி. சிற்றம்பலம் அன்னம் அவர்கள் யாவரதும் சேவையை மனதாரப் பாராட்டி எல்லாம் வல்ல ஆதி துர்க்கையின் திருவருளால் மென்மேலும் திருத்தொண்டாற்றி நலம் புரியுமாறு கேட்டுப் பிரார்த்திக்கின்றேன்.

நாகேஸ்வரம்
அளவெட்டி
05-05-95.

இங்ஙனம்
அருட்கவி. சீ. விநாசித்தம்பி

(இது 1995ம் ஆணடு நடைபெற்ற கும்பாபிஷேக சிறப்பிதழுக் காக அருட்கவியின் ஆசியுரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அண்டமெல்லாம் காத்தருளும் அன்னையவள், அளவெட்டி பெருமாக்கடவையில், ஸ்ரீ ஆதி துர்க்கை ஆலயத்தில் அருள்பாலித்து அடியவர்களின் குறை தீர்த்து வரும் அவளது வரலாற்றை அடியவர்களுக்கு எடுத்தியம்புவது அளப்பரிய செயலன்றோ!**

அந்த வகையில் அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா அவர்கள், அன்னையவளின் கும்பாபிஷேக விழாவையொட்டி அவள்புகழ் எடுத்தியம்பியமையானது, அவ்வாலயத்தின் ஆரம்ப வரலாற்றை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

அன்று 1995ம் ஆண்டில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவைத் தொடர்ந்து, திருமதி. சிற்றம்பலம் அன்னம் அவர்களின் நிர்வாகத்தின் கீழ், அடியவர்களின் அன்புடனும் பக்தியுடனும் ஆலயப் பணிகள் சிறப்புற இயங்கி வந்தமையானது அளவெட்டி மக்கள் மட்டுமன்று, அனைவரும் அறிந்த விடயமே! எனினும் அன்னாரின் மறைவுக்குப் பின், அன்னையவள் ஆலய நிர்வாகத்தை, பொது உடைமையாக்குவதற்கு அடியவர்கள் விருப்புக் கொண்டனர். இதன் பயனாக, அன்னார் திருமதி. சிற்றம்பலம் அன்னம் அவர்களின் பின்னுரித்தாளியான இராசநாயகம் வேலாயுதம் அவர்களும், அன்னாரின் துணைவரான தெய்வநாயகி வேலாயுதம் அவர்களும் குறித்த பணிக்காக, கோயில் நிர்வாகக் குழுவுடன் கூடநின்று துணைபுரிந்தனர்.

அனைவரது ஒத்துழைப்பினாலும், விடாமுயற்சியினாலும், இந்துக் கலாசார அமைச்சின் கீழ் HA/5/JA/1384 ம் இலக்கத்தில் 2011.01.20ம் திகதியன்று பதிவு செய்யப்பட்ட அன்னையின் ஆலயம், பொது உடைமையாக்கப்பட்டு, ஓர் பரிபாலன சபையையும் அமைத்து சிறப்பான ஒரு நிலையைத் தன்னகத்தே பெற்றுக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்கரம் தாங்கி நிற்க, எண்திசையும் காத்து நின்று, எங்கள் அன்னையவள், ஸ்ரீ ஆதி துர்க்கா தேவியவளின் ஆலயத்தில் அருள்பெற விளையும் பக்தர்கள் நலன் கருதி, சீரிய பல விஸ்தீரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் பேறாக, ஆலயத்தில் மண்டபங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது: தென்திசை நோக்கும் தெட்சணாமூர்த்திக்கும், அம்மன் அனுக்கிரகத்தில் அவளடி நிழலில் ஆலயமொன்றும் அமைக்கப்பட்டது: அழகுத் தெய்வமாம் பாலமுருகனுக்கும், காத்தல் கடவுளாம் வைரவருக்கும் சிலைகள் புதிதாக சிற்பமாக்கப்பட்டது: (அழகிய சிலைகள் அமைக்கப்பட்டது) மங்களம் பொங்கும் அளவெட்டி ஊரினிலே மதுரை மீனாட்சியவளின் மற்றொரு திருவுருவாம் ஸ்ரீ ஆதி துர்க்கையவள் ஆலயத்தில் சிங்கம், பலிபீடம் சீருடனே நிர்மாணிக்கப்பட்டது:

அவை மட்டுமன்றி, பாங்குடனே பொலிவுறும் அன்னையவள் ஆலயத்தின் அழகுக்கு அழகு சேர்க்க மணிக்கோபுரமும் அமைக்கப்பட்டு, தன்னகத்தே தனியானதொரு கம்பீரத் தோற்றத்தைக் கொண்டு விளங்குகின்றது.

இவ்வரிய பணிகளை சீருடனும் சிறப்புடனும் முன்னெடுத்தமைக்கு தம் உடல் உழைப்பு அனைத்தையும் அர்ப்பணித்த யாவருமே இங்கே பாராட்டப்பட வேண்டியவர்களே! எனினும் இப் பக்தர்களுள் ஒரு சிலரின் அர்ப்பணிப்புகள் பற்றிக் கூறவேண்டியது அவசியக் கடமையாகும்.

திரு வேலாயுதம் ஐயா அவர்கள், தினமும் அதிகாலை வேளையிலே குளப்பிட்டிப் பகுதியில் இருந்து அன்னையவள் ஆலயத்திற்கு பேருந்தில் வருவார். பேரூந்தை தவறவிடும் சந்தர்ப்பங்களிலும் கூட, தமது முதுமை வயதிலும் அம்பாள் மேற்கொண்ட அரிய பக்தியின் பிரதிபலிப்பாக, தமது துவிச்சக்கர வண்டியில் வந்து, காலை முதல் மாலை வரை நின்று, ஆலயத் திருப்பணிகளை மேற்பார்வை செய்ததுடன், தானும் அவர்களில் ஒருவராக தளத்திலே நின்று பணியாற்றியமை பெரும் பணியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்கள் வழிபாட்டுக்கு நெருக்கடிகள் ஏதுமின்றி, ஆலயச் சூழல் பரந்திருக்க ஏதுவாக, ஆலய விஸ்தரிப்புக்கென தமக்குரித் தான காணியை ஆயலத்திற்காக வழங்கியுதவிய திரு.கதிர்காமநாதன் அவர்களும் அவரின் துணைவியாரும் இங்கே குறிப்பிடத்தக்கவர்களே!


இன்னல்கள் மத்தியிலும் பல இடர்கள் எதிர்கொண்டு, இடம் பெயர்ந்து வாழ்ந்து வந்த நிலையிலும் கூட ஆலயத்தின் பொருளா ளராக தொண்டாற்றியதுடன், ஏனைய ஆலய வேலைகளுக்காகவும் பெரும் பணியாற்றிய திரு.வல்லிபுரம் யோகநாதன் அவர்களும் இவ்விடத்தில் பெயர் சொல்ல வேண்டியவர்களே!

'பெற்ற பூமியும் பிறந்த பொன்நாடும் நற்றவ வானிலும் நனி சிறந்ததே' என்பது ஆன்றோர் வாக்கு. இதற்கு உதாரணமாக, புலம் பெயர்ந்து, புகலிடம் தேடி, அந்நிய தேசத்தில் வசிக்கும் அளவெட்டியின் அடியார்கள், அன்னையவள் திருநாமம் உச்சரித்து, அவள்மேல் கொண்ட பக்தியை என்றென்றும் மனதில் கொண்டு, அந்நிய தேசத்திலிருந்து நிதியுதவிகள் செய்து வருவது குறிப்பிடத் தக்க விடயமே!

அன்னையவள் பெருமையையும், அவள் அருளைப் பெறு வோர்தனையும், அடியவர்களின் தொண்டுகளையும் எடுத்தியம்ப இவ்வோரிரு வார்த்தைகள் மட்டும் போதாது. எனினும் இவ்வாலய புனருத்தாரன பணிகள் யாவற்றிற்கும் பல்வேறு வழிகளில் பாடுபட்டு உதவிகள் புரிந்த அனைவரும், ஸ்ரீ ஆதி துர்க்கா தேவியவளின் கடைக்கண் பார்வையிலே தூய்மை பெற்று பல்வேறு நலன்களையும் பெற்று வாழ நிர்வாகம் சார்பில் வாழ்த்துக்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய திருப்பணியில்
# 2011.06.15 வரை பங்குகொண்டோர்
## வரவு

| | | |
|---|---|---|
| திருமதி அன்புதாசன் துவாரகா | 10,000 | 00 |
| திரு. சிறிதுரைராஜ் திருமகள் | 5,000 | 00 |
| திருமதி.க.தங்கம்மா | 3,000 | 00 |
| திரு.இ. வேலாயுதம் | 10,000 | 00 |
| திரு. இ . வேலாயுதம் | 43,000 | 00 |
| திருமதி .க. தங்கம்மா | 2,000 | 00 |
| திரு. ப. இராஜகோபாலன் | 5,000 | 00 |
| திருப்பணிச்சபையால் வரவு | 5,000 | 00 |
| திருமதி. அ. இராஜமணி | 2,000 | 00 |
| திருமதி.சி.விஜயமணி | 5,000 | 00 |
| திரு. செ.ரஞ்சன் (செல்வரஞ்சன்) | 1,000 | 00 |
| திருமதி செ.விஜயமணி | 1,000 | 00 |
| திரு.க. ஞான்சேகரம் | 10,000 | 00 |
| திருமதி.பொ.சம்சாந்தி, ல.மயூரதி | 25,000 | 00 |
| திரு. வி. அருணகிரி | 2,000 | 00 |
| திரு.வ. யோகநாதன் | 3,000 | 00 |
| திரு. இ. வேலாயுதம் | 40,000 | 00 |
| திரு. எம். பத்மநாதன் | 5,000 | 00 |
| துர்க்கா மரத் தொழிற்சாலை | 500 | 00 |
| பிறேமினி இஸ்மத் | 22,000 | 00 |
| துரைசிங்கம் சற்குணம் | 5,000 | 00 |
| திருமதி துரைரட்ணம் புஸ்பராணி | 1,000 | 00 |
| திரு. மயில்வாகனம் | 5,000 | 00 |
| சிசஸ்ரீ. இ.வெங்கடேஸ்வரஐயர் | 100,000 | 00 |
| திரு. ச. சிவபால கிருஸ்ணன் | 1,000 | 00 |
| திரு. செ. பத்மநாதன் | 1,000 | 00 |
| திரு. க. சிவபாதசுந்தரம் | 25,000 | 00 |
| திரு. செ. உதயகுமார் | 250 | 00 |
| திரு. கு.நேசன் | 500 | 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திருமதி. க.வசுமதி | 3,000 | 00 |
| திரு . க. அருந்தவம் | 1,000 | 00 |
| திரு. வைத்திலிங்கம் குடும்பம் | 1,000 | 00 |
| திரு. க. சிவபாதசுந்தரம் குடும்பம் | 25,000 | 00 |
| திரு. செ. யோகேஸ்வரன் குடும்பம் | 5,000 | 00 |
| திரு. கனேந்திரன் குடும்பம் | 3,500 | 00 |
| திருமதி. க. பரமேஸ்வரி | 200 | 00 |
| திருமதி. வே. மனோகரி | 1000 | 00 |
| திரு. கு. நேசன் | 500 | 00 |
| திரு. மதியாபரணம் | 5000 | 00 |
| திரு. சி. இராமேஸ்வரன் | 15,000 | 00 |
| திரு. தி. மனாதிபன் | 5,000 | 00 |
| திருமதி கிருஸ்ணகுமார் வனிதா | 1,000 | 00 |
| திரு. மா. மகாபரன் | 10,000 | 00 |
| திரு. வை. சரவணபவன் | 1,000 | 00 |
| திரு யோகன் இராமநாதன் & பராஅனந்தன் | 57,250 | 00 |
| திரு. சிவன் பத்மநாதன் | 22,900 | 00 |
| திருமதி சோதி சிவானந்தன் | 11,450 | 00 |
| திரு.விக்னேஸ்வரன் பொன்னையா | 22,900 | 00 |
| திருமதி சுந்தரி கங்காதரன் | 68, 550 | 00 |
| திரு. த. தாசன் | 34, 275 | 00 |
| திருமதி சராதாதேவி ஆனந்தசிவன் | 11, 475 | 00 |
| திரு. த.தசரதன் | 103, 400 | 00 |
| திரு. தம்பிப்பிள்ளை பரராஜசிங்கம் | 150, 000 | 00 |
| திரு. க. சிவபாதசுந்தரம் | 35,000 | 00 |
| திரு. கணன் பத்மநாதன் | 11,600 | 00 |
| திரு. என். கணேசன் | 11,600 | 00 |
| திரு. இரவீந்திரன் நாகலிங்கம் | 29,000 | 00 |
| திரு. குமார் துரைசிங்கம் | 13, 800 | 00 |
| திருமதி கேதீஸ்வரன் வசுமதி | 10, 000 | 00 |
| திரு. செ. சற்குணம் | 12,840 | 00 |
| திருமதி. கிருஷ்ணகுமார் வனிதா | 1000 | 00 |
| திரு. பொ. ஸ்கந்தேஸ்வரன் | 10,000 | 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திரு. செ. சற்குணம் | 840 | 00 |
| திரு. லவேந்திரன் | 12,000 | 00 |
| திரு. க. கதிர்காமநாதன் | 30,000 | 00 |
| சி. உதயகுமாரி | 5,000 | 00 |
| திரு. வேலாயுதம் வைகுந்தன் | 500 | 00 |
| திரு. துரையப்பா குடும்பம் | 1000 | 00 |
| திரு. ச. அன்புதாசன் | 1000 | 00 |
| திரு. மு. லோககுமார் | 1000 | 00 |
| திரு. மு. சிவசுப்பிரமணியம் | 3000 | 00 |
| திரு. இ. ஏகாம்பரமூர்த்தி | 500 | 00 |
| சிவஸ்ரீ. வா.நவநீதசர்மா | 15,000 | 00 |
| திரு. சிவபாதசுந்தரம் குடும்பம் | 37,500 | 00 |
| திரு. இராசநாயகம் | 500 | 00 |
| திரு. யோகநாதன் இராமநாதன் | 11, 700 | 00 |
| திரு. ப.ஞானசிவம் | 17, 400 | 00 |
| திரு. ப. ஞானகணேசன் | 11, 700 | 00 |
| திரு. P. சரவணபவன் | 5, 850 | 00 |
| திரு. தி. வரோதயன் | 10,000 | 00 |
| திருமதி வாசுகிதேவி | 1,000 | 00 |
| திருமதி இ.ரூபவதி | 200 | 00 |
| திரு. இ. மனோகரன் | 100 | 00 |
| திரு. ச. கதிர்காமநாதன் | 200 | 00 |
| திரு. ப. சசிதரன் | 1500 | 00 |
| திரு. கி. பரமேஸ்வரன் | 1000 | 00 |
| திரு. கா. சுப்பிரமணியம் | 500 | 00 |
| திரு. ச. நித்தியானந்தம் | 1000 | 00 |
| திரு. சி. கெங்காதரன் | 100 | 00 |
| திருமதி. க. ஜெனிதா | 1000 | 00 |
| திரு. ச. சித்திவிநாயகம் | 500 | 00 |
| திரு. ந. சத்தியகுகன் | 300 | 00 |
| திரு. ந. சத்தியரூபன் | 200 | 00 |
| திரு. சி. நவநீபன் | 500 | 00 |
| திரு. க. கோகுலன் | 500 | 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திரு. அ. சிவபாதசுந்தரம் | 1000 00 |
| திரு. சுந்தரலிங்கம் | 1000 00 |
| திரு. பொ. விக்னேஸ்வரன் | 3000 00 |
| திரு. செ. இரவீந்திரன் | 200 00 |
| திரு. சி. கனகவேல் | 5000 00 |
| சிவஸ்ரீ. S. ராஜேந்திரசர்மா | 5000 00 |
| திரு. வி. அருணகிரி | 5000 00 |
| திரு.சி.கஜீபன் | 500 00 |
| திரு.தே.தேவகரன் | 1000 00 |
| திரு. மு. செல்லையா | 1000 00 |
| திரு. இ. வேலாயுதம் | 500 00 |
| திரு. M. முருகானந்தன் | 1000 00 |
| திருமதி. கு. அருந்ததி | 5000 00 |
| திருமதி சுதாகரன் கலைவாணி | 100 00 |
| திருமதி இந்திரா | 500 00 |
| திரு.த. கணேசதாசன் | 200 00 |
| திரு. கு. உருத்திராபதி | 1000 00 |
| திர.சோ. நரேந்திரன் | 500 00 |
| லோ.சர்மிளா | 500 00 |
| திருமதி. இ. தனலட்சுமி | 500 00 |
| திருமதி. செந்தி | 2000 00 |
| திரு.வ.ரவிப்பிரியா (முருகையா) | 1000 00 |
| திரு. இ.குகேந்திரன் குடும்பம் | 10000 00 |
| திரு. இளங்கோ | 5850 00 |
| திரு. T. கணேதாசன் | 12870 00 |
| திரு. T.கெங்காதரன் | 9630 00 |
| திரு. ரவிக்குமார் குடும்பம் (வெள்ளவத்தை) | 5000 00 |
| திரு.ஸ்காந்தன் | 1001 00 |
| திருமதி.தாமினி | 18000 00 |
| திரு. தம்பாப்பிள்ளை குடும்பம் | 221350 00 |
| திருமதி அ.விஜிதா | 500 00 |
| திரு. P.L. சம்பந்தர் | 15000 00 |
| திரு. த. தசரதன் | 48625 00 |
| திரு. சுதர்சன் | 33750 00 |
| கனடா அன்பர்கள் | 30000 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய திருப்பணியில்
# 2011.06.15 வரை பங்குகொண்டோர்

| | | செலவு | வரவு |
|---|---|---|---|
| திருப்பணி நன்கொடைகள் | | | 1653726.00 |
| **கட்டட வேலை** | | | |
| சீமெந்து | 116 175. 00 | | |
| மணல் | 88 100. 00 | | |
| சல்லி / கல் | 78 050. 00 | | |
| கம்பி வகைகள் | 48 660. 00 | | |
| கூலி | 482 350.00 | 813 335.00 | |
| கூரை / கோப்பிசம் | | 176 888.00 | |
| வர்ண வேலைகள் | | 186 084.00 | |
| நிலம் (தராசோ) | | 121 040.00 | |
| கிறில் / கேட் | | 96 000.00 | |
| பல்லின செலவுகள் | | 45 931.00 | |
| பல்லின கூலிகள் | | 18 020.00 | |
| சிற்றுண்டி / உணவு | | 29 868.00 | |
| விளம்பரம் | | 12 000.00 | |
| **பாலஸ்தாபனம்** | | | |
| தட்சனைகள் | 3558.00 | | |
| அபிஷேகம் முதலியன | 36,903.00 | 40,461.00 | |
| **கும்பாபிஷேகம்** | | | |
| தட்சனைகள் | 89,600.00 | | |
| மேளம் | 42,500.00 | | |
| அபிஷேகம் முதலியன | 71,774.00 | 20,3874.00 | |
| செலவு மேலதிகம் | | | 89,775.00 |
| | | 17,43501.00 | 17,43501.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ சமூகமும் சமய வழிபாடும்

மனித சமூகம் நல்வாழ்க்கை வாழ வழி காட்டுபவையே சமயங்கள். உலக மக்களால் அனுஷ்டிக்கப்படும் கிறிஸ்தவம் , பௌத்தம், இஸ்லாம், சைவம் ஆகிய சமயங்கள் எல்லாம் அன்பு, ஒழுக்கம், தர்மம் முதலிய நற்பண்புகளைப் போதிப்பனவாய் உள்ளன. மேலே கூறிய சமயங்களுக்கெல்லாம் சிகரமாய் விளங்குவதும் எவராலும் போதிக்கப்படாது இறைவனால் அருளப்பட்ட வேத சிவாகமங்களாகக் கொண்டதும் அன்பு, ஒழுக்கம், தர்மம், யாக்கை, நிலையாமை, பிறப்பு, மும்மலங்கள், வினைப்பயன் இவற்றை விளக்குவதும் ஆகிய தத்துவங்களை போதிப்பதுமாகிய சிறப்பு சைவ சமயம் என்பதற்கே உரியது சைவம், அன்பை அடிப்படையாகக் கொண்டது. அந்த அன்பு பெற்றோர், பிள்ளைகள், சுற்றம் இவற்றில் ஆரம்பமாகி எல்லா உயிர்களிடத்தும் பரவி இறுதியில் இறை அன்பாக மாற வேண்டும்.

" அன்பும் சிவமும் இரண்டென்ப அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்த பின்
அன்பே சிவமாகி அமர்ந்திருப் பாரே"

என்பர் திருமூலர்

சிந்தனை வாக்கு செயல் ஆகியவற்றில் உண்மையாய் இரு, உனக்கு இறையருள் கிட்டியதை நீ உணர்வாய். சகல சீவராசிகளும் இறைவன் எப்போதும் அருள் செய்வான். அதற்கு அஞ்ச வேண்டியதில்லை. சிந்தனையுடன் தியானம் செய்ய பழகு, அவனது எல்லையில்லாக் கருணையை நீ உணர்வாய் இறைவன் உண்மை, நேர்மை இவற்றையே விரும்புகிறான். உதட்டளவில் செய்யப்படும் பிரார்த்தனைகள் அவனைச் சென்றடையா என அன்னை சாரதாதேவி கூறியவை நோக்கற் பாலது.

சமய குரவர்கள், அறுபத்தி மூன்று நாயன்மார்கள் வெவ்வேறு நிலைகளில் நின்று இறைவனை வழிபட்டு இறைபதம் சேர்ந்தவர்கள் அவர்களின் வாழ்க்கை வரலாறுகள் நாம் எப்படி வாழவேண்டும், எப்படி எப்படி வாழலாம் என்பதை எமக்குப் போதிக்கின்றன. இவற்றைச் சைவ மக்கள் கற்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தச் சரீரம் எமக்கு கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" இது ஆறுமுகநாவலர் வாக்கு.

இந்த வகையில் அளவெட்டி பெருமாக்கடவையில் அமைந்துள்ள ஆதிதுர்க்காதேவி ஆலயத்தை பரிபாலன சபையினரும் திரு வேலாயுதம் குடும்பத்தினரும் ஆலய அடியார்களும் சேர்ந்து புனர்நிர்மாணம் செய்து அழகாக, ஆலயத்தை அமைத்து குட முழுக்கு சிறப்பாக செய்து ஊர் மக்கள் வழிபட்டு அன்னை அருளைப் பெறும் வண்ணம் மிகச் சிறந்த சிவ புண்ணியத்தைச் செய்துள்ளமை எல்லோராலும் போற்றப்பட வேண்டியதே. அன்னையின் திருவருட்கடாச்சம் அனைவருக்கும் கிடைத்து எல்லோரும் இன்புற்றிருக்க பிரார்த்திப் போமாக. நித்திய விஷேட பூசைகள் தடையின்றி நிகழ அடியார்கள் அன்னைவரும் வழிசமைப்பார்களாக.

**மு.செல்லையா**

**இளைப்பாறிய ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவெட்டி பெருமாக்கடவை ஸ்ரீ ஆதிதுர்க்கை அம்பாள் ஆலய பரிபாலன சபை விபரம்

| | | |
|---|---|---|
| போஷகர் | : | திரு.இ.வேலாயுதம் |
| தலைவர் | : | திரு.கதிரேசு கதிர்காமநாதன் |
| செயலாளர் | : | திரு.குணசிங்கம் அகிலன் |
| பொருளாளர் | : | திரு. வல்லிபுரம் யோகநாதன் |
| உபதலைவர் | : | திருமதி. இராஜகோபாலன் கைலேஸ்வரி |
| உபசெயலாளர் | : | திருமதி சிவராசா ரஜனி |
| உறுப்பினர் | : | திரு. மருதப்பு பத்மநாதன் |
| | | திரு. சேதுவர் தர்மரத்தினம் |
| | | திரு. சின்னத்துரை ஞானசேகரம் |
| | | திருமதி மதியாபரணம் கௌசலாதேவி |
| | | திருமதி சத்தியபாலன் சத்தியரூபி |
| | | திருமதி லவேந்திரன் பாலாம்பிகை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஐங்கரன் வெல்டிங் வேக்ஸ்

**கிறில் கேற் வகைகள்**

**ஒட்டு வேலைகள் யாவும் நம்பிக்கை உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.**









மலை வேம்படி,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KATHIRGAMASINGAM & SONS

# கதிர்காமசிங்கம் அன் சன்ஸ்






சகலவிதமான பலசரக்குப் பொருட்கள், மற்றும் கட்டடப் பொருட்கள்
யாவற்றையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

## கதிர்காமசிங்கம் அன் சன்ஸ்










அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org